கனடா வாழ் சுன்னாகம் மக்கள் ஒன்றியம்


ASSOCIATION OF CHUNNAKAM PEOPLE IN CANADA

பொதுசன நூலகம்
22 MAR 2013
மாநகரசபை

# கலை நிகழ்வும் இராப்போசன விருந்தும் 2012

## ANNUAL DINNER & CULTURE SHOW

**22-12-2012**
**Queen Palace Banquet Hall**
1173 Brimlley Rd



Your #1 Choise
REAL ESTATE / LIFE INSURANCE / RESP
அனுபவம் - திறமை - பொறுமை
2 decades in Real Estate
✓Free Market Evaluation
✓Professional Services
✓Satisfaction Guaranteed
Century 21®
Affiliate Realty Inc. Brokerage*
208-80 Corporate Drive, Toronto, ON M1H 3G5
Tel : 416.290.1200(24hr) Fax : 416.290.1900
*Each Office is Independently Owned and Operated
Arun Chellappah
Sales Representative
Cell : 416-994-9411
email : arunc@sympatico.ca




PUBLIC LIBRARY JAFFNA


HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Future Realty Inc.,Brokerage*
7 Eastvale Drive, Unit 205, Markham, ON, L3S 4N8
Bus: 905-201-9977 Fax:905-201-9229
Email:nvpiraba@gmail.com
அளவான வீடு
அழகான வாழ்வு!!!
Pirabaa Nallathamby
Sales Representative
416-399-8093
www.pirabahome.com

## கனடிய தேசிய கீதம்



ஓ கனடா! எங்கள் வீடும் நாடும் நீயே
உந்தன் மைந்தர்கள் யாவரும்
உண்மை தேச பக்தர்கள்
நேரியவடக்காய், வலுவாய், சுதந்திரமாய்
உன் எழில் வடிவம் கண்டுவப்போம்
எங்கும் உள்ள நாம், ஓ கனடா
நின்னைப் போற்றி அணிவகுத்தோம்
எங்கும் உள்ள நாம், ஓ கனடா
எம் நிலப்புகழைச் சுதந்திரத்தை
என்றும் இறைவன் காத்திடுக
ஓ கனடா, நாம் நின்னைப் போற்றி
அணிவகுப்போம்!
ஓ கனடா, நாம் நின்னைப் போற்றி
அணிவகுப்போம்!

PUBLIC LIBRARY
JAFFNA

## NATIONAL ANTHEM: CANADA

**O Canada!**
**Our home and native land!**
**true patriot love in all thy sons command**
**with glowing hearts we see thee rise**
**The true north strong and free!**
**From far and wide**
**O Canada we stand on guard for thee**
**God keep our land glorious and free!**
**O Canada we stand on guard for thee**
**O Canada we stand on guard for thee.**






6945(P)
Arch

# தமிழ்த்தாய் வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ் மொழியே!
வானம் அறிந்தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

# கனடா வாழ் சுன்னாகம் மக்கள் ஒன்றியம் கொடிக் கீதம்

வாழ்த்திடுவோமெங்கள் வண்டமிழ்த் தாயை
வளர் புகழ், தமிழினம் கூடி
சுன்னை நகர் வளர் அன்னையர் மடிதனில்
சுதந்திர மாய்நாம் வளர்ந்தோம்
பன்னிரு கைமுரு கன்புகழ் பாடியே
பரவச மாகநாம் வாழ்ந்தோம்
பரவச மாகநாம் வாழ்ந்தோம்
பரவச மாகநாம் வாழ்ந்தோம்

தங்கத் தமிழிசைத் தாலாட்டில் வளர்ந்து
தமிழர் எனும் பெயர் பெற்றோம்
மங்களமாய் மக்கள் ஒன்றியம் வளர்தத்துமே
மாண்புடன் கனடாவில் வாழ்வோம்
மாண்புடன் கனடாவில் வாழ்வோம்
மாண்புடன் கனடாவில் வாழ்வோம்

எங்களுக்கோர் புக லிடம்தந்த பூமியை
என்றென்றும் நாம் மறவோமே
தங்கும் பொருள் செல்வம் அனைத்தையும் நல்கிடும்
தாயையும் நாம் மறவோமே - இம்
மண்ணையும் உறவென்று மதிப்போம் - இம்
மண்ணையும் உறவென்று மதிப்போம் - இம்
மண்ணையும் உறவென்று மதிப்போம்

எங்கள் கலைகலாச் சாரங்கள் பேணியே
ஏற்றமுடன் நாம் வாழ்வோம்
பொங்கும் புகழுடன் பொலிவுற ஓங்கி
புனிதமாய் நாமிங்கு வாழ்வோம்
புனிதமாய் நாமிங்கு வாழ்வோம்
புனிதமாய் நாமிங்கு வாழ்வோம்

வாழிய வாழிய சுன்னாக மக்கள்
வளர்புகழ் ஒன்றியம் நாளும்
ஏழிசை பரப்பியே எம்மவர் திகழ்ந்திட
என்றென்றும் அருள் பெற்று வாழ்க!
வாழ்க! வாழ்க! வாழ்க!

வளர்புகழ் தமிழினம் வாழ்க!
வையகம் போற்றிட வாழ்க
வையகம் போற்றிட வாழ்க
வையகம் போற்றிட வாழ்க
வையகம் போற்றிட வாழ்க

**ஆக்கியோன்:**
**க. புவனேந்திரநாதன் அவர்கள்**
**முன்னாள் பிரதி அதிபர் - ஸ்கந்தவரோதயாக் கல்லூரி - சுன்னாகம்**

சிவமயம்




மொடேர்ண் சர்வதேச இந்து ஆகம கலை கலாச்சார நிறுவனம்
MODERN INTERNATIONAL HINDUAGAMICCULTURALARTS ORG
Extd: 1965- Head office : - Chunnakam Sri Lanka Reg-No:GA2352
**Dr N.Somaskandak Kurukkal - Dr.N.Sarveswarak kurukkal**
www. modernhinduculture.com www.chunnakamkathiramalaisivan.com
**Tel: +9421-224-0025 -www. modernhinduculture.com**


**Representatives in Overseas for MIH**

**U.K**
Sivasri Soma.Srikara kurukkal
**India**
Sivasri- R.Pathmanathan
**Malaysia**
Sivasri P.P.Esan kurukkal
**Singapore**
Sriman S.Saravanabava sarma
**Australia**
M.Jeyaraman Iyer
**Germany**
Sivasri Soma. Thulasikantha kurukkal
**Swiszerland**
sivasri V.S. Sritharakurukkal
**France**
Sriman Soma.Jeyakumara sarma
**Netharland**
Satha Sivanatha sarma
**Canada**
Sivasri- Soma.Umaramana Kurukkal
**South africa**
srivasri Bala Suntharak kurukkal

## கனடாவாழ் சுன்னாகம் மக்கள் ஒன்றியத்தின் 12-ம் ஆண்டு விழாச் சிறப்புற

### வாழ்த்துரை

"கனடாவாழ் சுன்னாகம் மக்கள் ஒன்றியத்தின் 12-வது ஆண்டு விழா 22-1202012-ல் மிகவும் விமரிசையாக நிகழவிருப்பதை அறிந்ததும் மிகவும் பெருமையாக இருக்கின்றது. தாயகத்திற்கும் சுன்னாகம் நகரத்தின் முன்னேற்றத்திற்கும் புலம் பெயர்ந்த நாடுகளிலுள்ள சுன்னாக மக்கள் உதவி புரியும் நல்லலுள்ளம் கொண்டவர்களாகவிருப்பினும், கனடாவாழ் சுன்னாகம் மக்கள் தமது ஒன்றியத்தின் மூலம் வருடாவருடம் பொருளுதவிபுரிந்து மேன்மைபெறச் செய்வது மிகவும் போற்றுதலுக்குரியது. சுன்னாகத்திலிருந்து கனடாவில் நிரந்தர வதிவுரிமை பெற்றுப் பலகாலமாக வாழ்ந்து வருபவர்கள் பலர் அவ்வப்போது தாயகத்திற்கு சென்று பார்வையிட்டும் தமது உறவினர்களுக்கு வேண்டிய ஒத்தாசைகளை நிறைவேற்றியும், ஆலயங்கள் பொதுச்சேவா அமைப்புக்கள் ஆகியவற்றைப் பேணிவருவதையும் அறிந்து பெருமைப்படுகின்றோம். கனடாவாழ் சுன்னாகம் மக்கள் ஒன்றியத்தின் போஷகர்கள், தலைவர் முதலான நிாவாகத்தினர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் ஆகிய நல்லுள்ளங்கள் அனைவருக்கும் சுன்னாகம் கதிரமலை ஸ்ரீ சுவர்ணாம்பிகை சமேத ஸ்ரீ பொன்னம்பலவாணப் பெருமானைத் துதித்து நல்லாசிகளைத் தெரிவிக்கின்றோம்.

சிவாகம வித்வான் Dr சிவஸ்ரீ நா.சோமாஸ்கந்தக் குருக்கள்
முத்தமிழ் குருமணி சிவஸ்ரீ Dr நா.சர்வேஸ்வரக் குருக்கள்
வாழ்க பல்லாண்டு ! வளர்க தங்கள் சமய சமூகப்பணி
**www.modernhinducultur.com**
22-12-2012

PUBLIC LIBRARY
JAFFNA



# பிரதம விருந்தினர் உரை



**பிரதம விருந்தினர்**
**திரு. திருமதி மகாலிங்கம் மதிவண்ணன் புனிதவதி தம்பதிகள்**

கனடா வாழ் சுன்னாக மக்களுக்கு எமது அன்பான வணக்கம் பல.

தங்களின் ஒன்றியத்தின் 12 வது ஆண்டு நிறைவு விழாவிற்கு பிரதம அதிதிகளாக எம்மையும் எம் குடும்பத்தினரையும் அழைத்ததிற்கு முதற்கண் எம் நன்றியை செலுத்துகிறோம். அத்துடன் எமது அன்னையை சிறப்பு விருந்தினர்களுள் ஒருவராக அழைத்ததற்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

யான் தங்கள் ஒன்றியம் ஆற்றி வரும் அரிய பெரிய சேவைகளை தங்களின் ஞாபக மலர்கள் மூலம் அறிந்துள்ளேன். சென்ற இரு ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியை கண்டு களிக்கும் வாய்ப்பும் பெற்று இருந்தேன். இந்த சந்தர்பத்தில் அதிபர்.திருவாளர். திருநாவுக்கரசு அவர்கள் என்னுடன் உரையாடும் போது தங்களின் நிகழ்ச்சி ஒன்றிற்கு தலைமை தாங்கி விருந்தினராக சமுகம் தரும்படி கேட்டுக்கொண்டார். அவர்களின் வேண்டுகோளிற்கு இணங்க நானும் இதனை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டேன். எனது தந்தையார் தொழில் அதிபர் பூதப்பிள்ளை.மகாலிங்கத்தின் புதல்வர்களுள் யானும் ஒருவன் பூ.மகாலிங்கம் சுன்னாகத்தில் செட்டியார் வளவில் பிறந்தவர். எனது அருமைத் தாயார் சங்கானையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

எனது கல்வியை யாழ்ப்பாணம் கொழும்பு கனடா போன்ற பிரதேசங்களில் பெற்றுள்ளேன். தற்போது கனடாவிலுள்ள Rearch of Motion company (R.M) ல் பொறியியலாளராகக் கடமை புரிகிறேன். தொழில் நிமித்தமாக யான் Bramton இல் வசிக்கிறேன் பொறியியலாளரான எனது மனைவியும் ஒரு ஆசிரியராக கடமை புரிகின்றார். யான் எனது சொந்த ஊரை என்றும் மதிப்பவன். சுன்னாகம் அன்று முதல் இன்று வரை எல்லா வளங்களும் கொண்ட ஒரு பிரசித்தி பெற்ற நகரம். இயற்கை வளம்இ கல்வி வளம்இ பக்தி வளம்இ இவை யாவும் கொண்ட பிரதேசம். இங்கு காணப்படும் செம்மண் தோட்டச் செய்கைக்கு மிகவும் உதவுகின்றது. பாடசாலைகள் கோவில்கள் தொழிற்சாலைகள் போன்றவை நகரை அலங்கரிக்கின்றன. அண்மையில் பிரபல தொழிற்சாலைகளும் ஆயுள் வேதபாட சாலைகளும் பிற நாட்டு உணவகங்களும் காட்சி அளிக்கின்றன. வெகு விரைவில் சுன்னாகம் பட்டணசபை மாநகரசபையாக மாறும் வாய்ப்புண்டு.
நிலையற்ற அரசியல் காரணமாக யாம் இந்நாட்டிற்கு வந்துள்ளோம். வளமும் வசதியும் ஜனநாயகமும் கொண்ட கனடா நாடு எம்மை கனடியர்களாக ஏற்றுக்கொண்டதற்காக நன்றியுடன் வாழ்ந்து இந்நாட்டின் வளர்ச்சிக்கும் பிறந்த ஊருக்கும் சேவை செய்ய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி எமது குடும்பத்தின் சார்பிலும் மீண்டும் ஒரு முறை எமது நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறோம்.
வணக்கம்

**மதிவண்ணன் மகாலிங்கம்** B.A.Sc
**புனிதவதி மதிவண்ணன்** B.A. Sc ,B.Ed

ஓ

# கனடா வாழ் சுன்னாகம் மக்கள் ஒன்றியத்தின் தலைவரின் சிந்தனையில் இருந்து ...........



பொன். சுவாமிநாதர்.

11 ஆண்டுகளைக் கடந்து பன்னிரண்டாம் ஆண்டில் கால் பதிக்கும் எமது ஒன்றியத்தின் கலைவிழாக் காண வந்திருக்கும் அனைவருக்கும் எனது உளம் கனிந்த வணக்கங்களும் நன்றிகளும்.

எங்கள் ஒன்றியம் இன்னும் வளர்ச்சி பெற நாங்கள் அனைவரும் வேகத்துடனும் ஒற்றுமையுடனும் உழைக்கவேண்டும் என நம்புகிறேன். நாங்கள் ஒரே ஊரில் பிறந்து கல்வி கற்று இன்று வெவ்வேறு தேசத்தில் வாழ்ந்தாலும் இது போன்ற கலைவிழாக்கள் எமக்கு மீண்டும் இங்கே எங்கள் பழைய நினைவுகளை எண்ணிப்பார்க்க உதவுகின்றது. அது மட்டும் இல்லாமல் எங்கள் நாட்டின் பாரம்பரியங்களை எமது இளம் சந்ததிக்கு எடுத்துச் சொல்ல உதவி புரிகின்றது.

வருடற்தோறும் எங்கள் சுன்னாகம் மண்ணில் பிறந்த அல்லது அவர்கள் வழி தோன்றியவர்களை பிரதம விருந்தினராக அழைத்து கௌரவித்து வருகிறோம். அவ்வரிசையில் இம்முறை பிரதமவிருந்தினராக வருகை தந்திருக்கும் திரு. திருமதி. .மதிவண்ணன் தம்பதியினரையும் அத்துடன் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்ள வந்திருக்கும் திரு.திருமதி.தனேந்திரன் அவர்களையும் வரவேற்பதில் எமது ஒன்றியம் பெரும் மகிழ்ச்சி அடைகின்றது.

இன்று இந்த விழா இனிதே நடைபெற ஆதரவு வழங்கிய அனைவருக்கும் அத்துடன் ஒன்றியத்தின் போஷகர்கள் உறுப்பினர்கள் மற்றும் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

வணக்கம்.

# செயலாளரின் சிந்தனையில் இருந்து சிலவரிகள்...

**ந.தர்மலிங்கம்** C.Eng. MIE.SL



சுன்னாகம் மக்கள் ஒன்றியத்தின் 12 வது ஆண்டு நிறைவு கலைவிழா மலரினூடாக அகத்திலும் புலத்திலும் எம்மவர்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். பல உயர் நோக்கங்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது ஒன்றியம் பல செயல் திட்டங்களை எம்மூரிலும் கனடாவிலும் நிறைவேற்றியுள்ளது. அதற்கான திட்டங்களை முன்னெடுத்து நிறைவேற்றிய அனைவருக்கும் எனது பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 12 ஆண்டுகளில் பல நல்லனவற்றைச் செய்தாலும் எம் மனதில் சில ஆதங்கங்களும் நெருடல்களும் இருக்கத்தான் செய்கிறது. முக்கியமாக எம்மூர் குழந்தைகளின் கல்வி வளர்ச்சியில் எம்மால் எதையும் செய்ததாக குறிப்பிட முடியவில்லை. ஒன்றியத்தின் நிதி நிலமையும் அதற்கு இடம் தரவில்லை. நம்மூர் குழந்தைகளில் எத்தனையோ பேர் முன்பள்ளிகளிலும் ஆரம்பப் பாடசாலைகளிலும் எது வித வசதிகளும் இன்றி "ஏதோ" போய் வருகிறார்கள் என்பதை எம்மில் பலர் அறிந்திருக்கிறோம். கணனி மயப்படுத்தப்பட்ட நவீன மயமான இவ்வுலகில் கணனிகளை கண்ணால் காணத சிறார்கள் பலர் உள்ளனர். அவர்களுக்கு சாதாரண கல்வி உபகரணங்கள் கூட "ஆடம்பரப்" பொருட்கள்தான்.

குறிப்பாக எம்மூரில் உள்ள வசதியற்ற சிறார்களுக்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்தி கொடுத்து அவர்களின் கல்வி வளர்ச்சியிலும் எமது பங்கு நிச்சயமாக இருக்க வேண்டுமென்பது அவசியமானதாகும். இனிவரும் காலத்தில் உடனடியாக இதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து செய்ய உங்கள் ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென உங்கள் அனைவரையும் வேண்டுகிறேன்.

சுன்னாகம் என்பது சிற்றூர்களை உள்ளடக்கிய ஒரு பேரூர் இச்சுற்றூர்களின் மக்கள் எல்லோரும் ஒற்றுமையாக சுன்னாகம் ஒன்றியத்தில் இணைந்து ஒருபலமான ஒன்றியத்தை உருவாக்க முன்வர வேண்டும். ஒன்று கூடல்களை வெறுமனே கூடிக்களிக்கும் விடயமாக மட்டுமே கருதாது அதற்கும் அப்பால் பெருமைமிக்க எமது ஊர் மக்களின் உயர்வுக்கும் எம்மால் இயன்ற உதவிகளை மனம் கோணாது செய்ய வேண்டும்.அதன் மூலம் நாம் பல நற்திட்டங்களை முன்னெடுத்து எமது சுன்னாகப் பிரதேசம் முழுவதற்கும் பல முன்னேற்றங்களைக் காணமுடியும்.

எமது 12 வது ஆண்டு கலைவிழாவின் வெற்றிக்கும் சிறப்பிற்கும் பக்கபலமாக நின்று உழைத்த ஒன்றியத்தின் போஷகர்கள் உறுப்பினர்கள் மற்றும் அனைவருக்கும் எனது மனம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி.

வணக்கம்.

# Cintac Business

**ACCOUNTS AND BUSINESS ADIVSORS**

## ACCOUNTING SERVICES

- BOOKKEEPING AND PAYROLL SERVICES
- GST AND PST RETURNS
- A/R AND A/P MAINTENANCE
- COMPUTERIZATION AND SYSTEM SET-UP
- PREPARING FINANCIAL STATEMENTS

## MANAGEMENT CONSULTING SERVICES

- INCORPORATING A BUSINESS
- PREPARING BUSINESS PROPOSALS
- RE-STRUCTURING
- BUSINESS VALUATIONS
- CCRA AUDIT REPRESENTATION

## FINANCIAL SERVICES

- PERSONAL, BUSINESS LOAN & MORTGAGE ARRANGEMENTS
- R.R.S.P., R.E.S.P. AND MUTUAL FUNDS
- PERSONAL FINANCIAL PLANNING

## SPECIALIZING IN INCOME TAX

- PERSONAL TAX PLANNING AND PREPARATION E-FILE
- CORPORATE TAX PLANNING AND PREPARATION
- TAX APPEALS AND REPRESENTATION

FAST RELIABLE CONFIDENTIAL

MANO THARMARAJAH, CGA OR KRISH THARMARAJAH, DIP
RAM THARMARAJAH, BASC., BSC. **SHARMELY**

TEL: 416-438-6318 FAX: 416-438-6837

1200 MARKHAM ROAD, UNIT 308, SCARBOROUGH, ONTARIO M1H 3C3

# "செழித்துவாழும் செல்வநகர் சுன்னாகப் பேரூர்"

கலாசூரி ஆ.சிவநேசச்செல்வன் M.A,M.Sc.



சுன்னாகம் என்றால் "சந்தை" தான் நினைவில் வரும்
பழமையும் கல்வியும் பாரம்பரியமும் நிறைந்த ஊர்
சுன்னாகம் என்ற பேரூரைச் சூழவுள்ள
கிராமத்து மக்கள் அங்கு வந்து கூடுவதும்
அயலூர் மக்கள் அவ்வூரை "அசலூராக்கி"
வாழ்வின் நிறைவையெல்லாம் பெற்றுச் செல்வதும்
இன்று நேற்றல்ல அது ஒரு வரலாற்றின் தொடர்ச்சியே!

சந்தை மட்டுமல்ல கந்தரோடையென்ற வரலாற்றுக்
கருவூலம் இயற்கையழகுள்ள செழித்தவயல் வெளிகள்
ஆலயங்கள் கல்விச் சாலைகள் கல்வியால் எழுச்சிபெற்ற
பெரியோர்கள் எல்லாம் செறிந்து வாழும் "செல்வநகர்"
சுன்னாகம்! கதிரைமலைச்சிவன்கோயில் ஐயனார்
முதலாக அம்பாள் திருத்தலங்கள் எல்லாம் நிறைந்த ஊர்!

கல்வியால் உழைப்பால் கனத்த உறவுகளால்
என்றும் அமைதியையே தேடும் பெருமக்கள்
பேரழிவுகள் வந்த காலமெல்லாம் உறுதி தளராது
வாழ்ந்து நிமிந்தது வளம் தேடி வாழ்கின்றார்
கதிரைமலைச்சிவனும் அருள் சுரக்கும் ஐயனாரும்
மக்கள் வாழ்வை என்றும் மேன்மையுற்று
வளர வழிசெய்தார் வாழ்க வளம் பெறுக!

ஒன்று பட்டு வாழ்ந்து உயர்வைத்தேடி வந்து
புலம் பெயர்ந்த நாட்டில் வாழும் பெருமக்கள்
சென்ற இடமெல்லாம் சிறப்போடு வாழ்ந்து
புலம் பெயர்ந்து வாழும் வாழ்வின் பயனை
நினைந்து மகிழ்வதுடன்இ சொந்தங்கள் பந்தங்கள்
இனங்கள் உறவுகளை என்றும் மறவாது
ஆண்டுதோறும் பேசி மகிழ்ச்சியுடன்
கூடிக்குலாவி மகிழ்வதுடன் உதவிக்கரம் நீட்டுகின்றார்!

உறவுகள் வெறுமனே காற்றோடு போவதல்ல அவை
"உணர்வுகளாய்" மாறி வேகம் மலர ஏதேதோ
செய்ய நினைப்பதும் செவி குளிரப் பேசுவதும்
பெருமைக்குரிய பெரும் செயலாய் நடக்கிறது!

வாழ்க வளம் பெறுக சுன்னாகம் ஒன்றியத்தின்
செயலால் புதியதொரு சக்தியும் எழுச்சியும்
ஆண்டு தொறும் எழுகவென வாழ்த்துவோம்!
சேவை தொடர்க! நிம்மதியும் நிறை வாழ்வும்
என்றும் எழுக என வாழ்த்துவோம்!
வாழ்க வளம் பெருகவென வாயார வாழ்த்தி
என்றும் உறவுகளை மறக்காது பணி தொடர்க!

*With Best Compliments From*


**Thayalan Nagamuthu**

**Cell: 416 464 2972**

**DAISY MART**

**2278 Lawrence Avenue East**
**Scarborough, ON M1P 2P9**
**416 752 5279**

**2275 Lakeshore Blvd.,**
**Toronto, ON M8V 3y3**
**416 259 6115**



## மா. இராமலிங்கம் – J.P
## சுன்னாகம் மத்தி J/198 கிராம அலுவலர்
## அவர்களின்

# வாழ்த்துரை

தலைவர், செயலாளர் நிர்வாகசபை மற்றும் போஷகர் உட்பட சுன்னாகம் மக்கள் ஒன்றிய உறுப்பினர்கள் அனைவருக்கும் கனடாவாழ் சுன்னாகம் மக்கள் ஒன்றியம் 12வது அகவையை நிறைவு செய்யும் சங்கத்தினருக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு இவ்வளவு காலமும் இச்சங்கத்தின் சிறப்புடன் நிர்வகித்து வழிநடத்திச் செயலாற்றும் அதன் பழைய புதிய செயற்குழு உறுப்பினர்கள் யாவருக்கும் தொடர்ந்து தம் பணியைச் செவ்வனே செய்ய உதவவேண்டும் என்றும் சுன்னாகம் மக்கள் குழு ஒன்றிய உறுப்பினர்களையும் அன்பாக வேண்டி சங்கத்தின் வளர்ச்சி சிறப்பாக அமைய நல்லாசிகள் கூறுவதில் பெருமையடைகின்றேன்.

இந்து சமுத்திரத்தின் முத்தான இலங்கையின் வடக்கே இயற்கை அழகு கொண்ட யாழ்ப்பாண மாவட்டத்தில் நீர்வளமும் நிலவளமும் நிறைந்ததும், பழைமையும் பெருமையும் வாய்ந்த பண்டை அரசர்களினால் பேணப்பட்டதுமான புண்ணிய பூமியாகத் திகழுகின்ற நகரமே சுன்னாகமாகும். இவ்வெள்ளியம்பதியிலே பண்டைய காலந்தொட்டே தமிழ் மொழியை கற்றலும் பல்துறைகளிலும் புலமைத் தன்மைகளும் சமயப்பற்றுக்களும் மேலோங்க வெள்ளியங்கிரியாக மிளிர்கின்றது.

கொழும்புத்துறை சிவயோக சுவமிகளும், நயினாதீவு முத்துக்குமார சுவாமிகளும் இம்மண்ணில் உலாவிச்சென்ற பெருமையுடையது. செல்லாச்சி அம்மையாரும், சைவாசார சீலரும் சித்தாந்த வித்தகரும் ஆகிய குமாரசுவமிப் புலவர், முத்துக்குமார கவிராயர், முருகேச பண்டிதர், வரத பண்டிதர் போன்ற பல மகான்களின் கால் பதித்த புனிதம் சுன்னாகத்திற்கு உண்டு.

சுன்னாகம் பட்டின சபையில் இரு தடவைகள் தலைவராக அமரர் பொ. நாகலிங்கம் அவர்கள் தெரிவு செய்யப்பட்டு இப்பட்டின பகுதிக்கு பெரும் சேவைகள் ஆற்றி சுன்னாகத்தை சுந்தர புரியாக்கி வைத்துள்ளார். செனடர் நாகலிங்கம் அவர்களின் பதவிக் காலத்தில் அவரோடு திரு. வி. தர்மலிங்கம் (பாராளுமன்ற உறுப்பினர்), டாக்டர் ஆ. நடராசா மற்றும் அங்கத்தவர்கள் மிகுந்த தீர்க்கதரிசனத்துடன் இப்பகுதிகளை முன்னேற்றுவதற்காக செயற்பட்டார்கள். கடந்த யுத்தத்தினால் சின்னாபின்னப்பட்ட சுன்னாகம் தற்போது புதிய பிரதேச செயலகம், புதிய பிரதேச சபை, M.O.H அலுவலகம், சுன்னாகம் மத்திய வைத்திய நிலையம், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி, பஸ் தரிப்பு நிலையம், ஐயனார் கோயில், கதிரமலைச் சிவன் கோயில், மயிலணி சிவன், முருகன், அம்மன் கோயில், காளி கோயில் புதிதாக கட்டப்பட்டும் திருத்த வேலைகள் செய்தும் சிறப்பாக இயங்கி வருகின்றது. தற்போது வருசப்புல அம்மன் கோயிலும், சந்திரசேகரப் பிள்ளையார் கோயிலும் புனரமைப்பு வேலைகள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஏழு கிராம அலுவலர் பிரிவுகள் பாவனையிலுள்ள சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானம் யுத்தத்தினால் முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்த வேளையில் கொத்தியாலடி இந்து மயானத்தின் அபிவிருத்திச் சங்கம் கேட்டுக் கொண்டதற்கிணங்க கனடா வாழ் சுன்னாகம் மக்கள் ஒன்றியம் கொத்தியாலடி இந்து மயானத்தை புனரமைப்பதற்கான நிதியினை தந்து அபிவிருத்திப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. தொடர்ந்து செவ்வனே செய்ய உதவ வேண்டும் என்று சுன்னாகம் மக்கள் ஒன்றியக்குழு உறுப்பினர்களையும் அன்பாக வேண்டி இப்பணிகள் தொடர்ந்து நடப்பதோடு சங்கமும் சிறப்புடன் செயலாற்ற எனது நல்லாசிகளையும் நன்றிகளையும் தெரிவித்து அமைகின்றேன்.

**மா. இராமலிங்கம்**
தலைவர்,
கொத்தியாலடி இந்து மயான அபிவிருத்திச் சங்கம்.



# வலிதெற்குப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட மயானங்களில் சுன்னாகம் கொத்தியாலடி மயானம் முக்கியமானதாகும்.

இலங்கை அரசாங்கததின் விசேட செயற்திட்டத்தில் அமைக்கப்பட்ட பிரமாண்டமான புதிய 3 அடுக்கு கட்டிடத்தில் அமைந்துள்ளது வலிதெற்குப் பிரதேச சபையின் தலைமைக் காரியாலயம். இதன் தலைமைத்துவ வரிசையில் 1வது தலைமைத்துவம் எனக்கு கிடைத்தமை ஒரு வரப்பிரசாதமாகும். எனது காலப்பகுதியில் பல திட்டங்களை நெறிப்படுத்தவுள்ளேன். சுன்னாகம் மீன் சந்தை புதிய கட்டிடம், பஸ் நிலையப் புனரமைப்பு, சந்தை 3 மாடிக் கட்டிட புனரமைப்பு, வீதிகள் புனரமைப்பு, மயானங்கள் புனரமைப்பு போன்ற திட்டங்களை நிறைவு செய்வதே எனது நோக்கமாகும்.

இந்த வகையிலே சுன்னாகம் கொத்தியாலடி மயானப் புனரமைப்புச் செய்ய வேண்டும் என்பதும் எனது நீண்டகால நோக்கமாகும். ஆனால் பிரதேச சபையின் நிதி நிலைமை இத்திட்டத்திற்கு சாதகமாக இல்லாத காரணத்தால் மனமுடைந்து இருந்தபொழுது திரு. கதிரவேலு கருணைநாயகம், திரு. பொன்னம்பலம் தேவராசா அவர்களின் உதவியுடன் கனடா வாழ் சுன்னாகம் மக்கள் ஒன்றியத்துடனான தொடர்புகள் ஆரம்பித்தமை மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். எங்களுடைய தொடர்பு முயற்சிகள் ஒன்றியத் தலைவர் திரு. பொ. சுவாமிநாதர் வைகாசி 2012இல் சந்தித்தமை மயான புனரமைப்புச் சம்பந்தமான கலந்துரையாடல்கள், உறுதி மொழிகள், கனடா சென்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளினால் ஆலோசகர் திரு. க. திருநாவுக்கரசு அவர்களால் வங்கிக் கணக்கிற்கு நிதி பரிமாற்றம் செய்யப்பட்டமை எல்லாம் வரவேற்கத்தக்கதும் மகிழ்ச்சிக்குரிய விடயமுமாகும்.

தாயக மண் பற்றிய எண்ணங்களோடும் சிந்தைகளோடும் புலம்பெயர் நாடுகளில் காலத்தின் தேவை கருதியும், பொருளாதார நெருக்கடி மீள்ச்சி கருதியும், வாழ்ந்து வருகின்ற எமது சுன்னாகம் மக்களைக் பிரதிநிதித்துவப்படுத்தும் கனடா ஒன்றிய அமைப்பினருக்கும் எனது வாழ்த்துக்கள்.

பொதுச் சேவையில் மிகுந்த ஆர்வமும் அக்கறையும் கொண்ட தங்களின் விசுவாசிகளாகிய செயலாளர் பொ. தேவராசா, பொருளாளர் க. கருணைநாயகம் ஆகியோர் மிகுந்த வேலைச் சுமையின் மத்தியிலும் சுயநலம் பாராது, பொதுநல சேவையாற்று கின்றார்கள் என்றால் அது போற்றுதற்குரிய விடயமாகும். பல ஆண்டுகளாக புனரமைப்புக்கள் எதுவுமின்றி பல்வேறுபட்ட தரப்பினரின் விமர்சனங்களுக்குள்ளாகியிருந்த மேற்படி மயானம் புதுப்பொலிவு பெறுவதையிட்டு மனம் பூரிப்படைகின்றது.

கனடா ஒன்றியத்தின் அளப்பெரிய சேவைகள் எமது தாய் மண்ணிற்கு மேலும் கிடைக்கப்பெற வேண்டும் என்றும், கொத்தியாலடி மயான அபிவிருத்திகளிற்கு நிதி வழங்கிய கனடா வாழ் சுன்னாகம் மக்கள் ஒன்றிய ஆலோசகர்கள், தலைவர், அங்கத்தவர்கள் மற்றும் நிதி வழங்கிய அனைவருக்கும் எமது வலி தெற்கு பிரதேச சபை சார்பில் நன்றியினையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

நன்றி

**தலைவர்**
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

**தி. பிரகாஷ்**
**தவிசாளர்**
வலிகாமம் தெற்கு பிரதேச சபை
சுன்னாகம்

# INSURANCE SERVICES




**Thana Manickavasagar**

*Broker*

**Cell: 416-728-5772**

Business: 416-519-3896

**Non Medical Insurance for Low Rates upto age 85**



**Life Insurance**

**Critical Illness Insurance**

**Mortgage Insurance**

**RRSP - Start from $25**

**RESP - Start from $25**

**(20%-40% Government Grant + 15% Company Bonus)**

80 Nashdene Road, Unit D218
Scarborough, On
M1V 5E4

thana7@gmail.com
www.thana.ca

# கனடா ஒன்றிய தொடர்புகள் பற்றிய ஒரு - தகவல்



"கனடா ஒன்றியத்திற்கு எமது வாழ்த்துக்கள் "

கனடா ஒன்றியமானது நிதியை சேகரித்து கையிருப்பில் வைத்திருந்த நிலையில் வைகாசி மாதம் 2012இல் இலங்கை வந்திருந்த ஒன்றிய தலைவர் திரு. பொ. சுவாமிநாதர் அவர்கள் திரு. பொ. தேவராசா, திரு க. கருணைநாயகம் அவர்களைச் சந்தித்தவேளை கொத்தியாலடி இந்து மயான நிலைமைகள் பற்றிக் கலந்துரையாடப்பட்டன. தொடர்ந்து சுன்னாகம் வலிதெற்கு பிரதேச சபைத் தலைவர் திரு. T. பிரகாஷ், செயலாளர் திருமதி S. முருகனேசன் அவர்களுடன் கலந்துரையாடலின் பொழுது புதிய சங்கம் ஒன்று அமைக்க வேண்டிய தேவையை பிரதேச சபைத் தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து சங்கம் ஒன்று 20-05-2012இல் அமைக்கப்பட்டது. அதன் செயலாளராக திரு. P. தேவராசா, தலைவர் திரு M. இராமலிங்கம் - J.P, பொருளாளராக திரு. K. கருணைநாயகம் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

சங்கத்தின் பெயரின்மூலம் நிதி பரிமாற்றம் செய்வதற்கென வங்கிக் கணக்கும் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை வந்திருந்த ஒன்றியத் தலைவர் தான் கனடா சென்றவுடன் ஒன்றிய ஆலேசகர்கள், அங்கத்தவர்கள் எல்லோருடனும் கலந்துரையாடி விரைவில் நிதி அனுப்பி வைக்கப்படும் என்று உறுதி அளித்ததைத் தொடர்ந்து தலைவர் கனடா சென்றார். அங்கு சென்ற அவர் கலந்துரையாடலின் பின் நிதி ஆலோசகர் திரு. K. திருநாவுக்கரசு அவர்களால் சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கிக் கணக்கில் நிதி வைப்புச் செய்யப்பட்டது. உடன் மயான அபிவிருத்தி வேலைகள் 29-08-2012இல் ஆரம்பிக்கப்பட்டன.

கனடா ஒன்றியமானது கொத்தியாலடி இந்து மயானத்திற்கு ஆற்றிய மறக்க முடியாத ஒரு மாபெரும் சேவையை வாழ்நாளில் மறக்கவும் முடியுமா என்று சுன்னாகம் வாழ் மக்கள் பேசிக் கொள்கின்றமை மகிழ்ச்சிக்குரிய விடயம் தான்.

வாழ்க! வளர்க! கனடா ஒன்றியம்.

நன்றி

**பொன்னம்பலம் தேவராசா**
Rtd. Auditor,
President - Rural Civil Defence Committee
Chunnakam Police J/197

***P. THEVARAJAH***
***Secretary***
***Kothialady Hindu Crematorium***
***Development Society***
***Chunnakam***

PUBLIC LIBRARY
JAFFNA



# பன்னுதமிழ் சொன்ன இலக்கணக் கொட்டர் முருகேச பண்டிதர்



19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் இலக்கண,இலக்கிய அறிவு நிரம்பப் பெற்றவர் என ஈழம் மற்றும் தமிழ்நாட்டுச் சான்றோர்களால் போற்றப்பட்ட பெருமைக்குரியவர் முருகேச பண்டிதராவார்.இவர் ஆசுகவியாக, எந்த விடயத்தைப் பற்றியும் உடனே செய்யுளியற்றும் ஆற்றல் மிக்கவராக விளங்கினார்.

கருத்து வீச்சும்,கற்பனைப் பெருக்கும், பிறநயங்களும் கொண்டு, படிப்போருக்கு இன்பமும் பக்தியும் அளிக்க வல்ல இவரது பாடல்களில் புராண வரலாறுகளும், சாஸ்திர உண்மைகளும் விரவியிருக்கக் காணலாம்.இவர் சுன்னாகம் தெற்கில் சட்டம்பியார் பூதப்பிள்ளை-உமைநாச்சியம்மை தம்பதிகளுக்கு மகனாக 1829ஆம் ஆண்டு பிறந்தார்.இவரது உடன்பிறந்தோர் சுப்பிரமணியர், கதிர்காமர், நன்னியம்மை ஆகியோராவர்.இவர்களில் சுப்பிரமணியர் பிச் (Fitch) என்ற நாமத்துடன் கிறீஸ்தவ மதத்தில் சேர்ந்து போதகராக இலங்கையிலும் இந்தியாவிலும் கடமையாற்றினார். ஏனையோர் விவசாயத்திலேயே ஈடுபட்டனர். முருகேச பண்டிதர் தமது இளமைக் காலத்தில் சிவசங்கர பண்டிதரிடம் சித்தாந்த தர்க்க சாஸ்திரங்களை ஐயந்திரிபறக் கற்றார்.அத்துடன் உடுப்பிட்டி சிவசம்புப் புலவரிடம் பஞ்சலக்கணங்களையும், புராண இதிகாசங்களையும் தெளிவுறக் கற்றார்.

இவர் இலக்கணப் பிழையின்றி பேசும்,எழுதும் தன்மை கொண்டவர்.அத்துடன் பிறரது பேச்சிலும், எழுத்திலும் காணப்படும் வழுக்களை கண்டறிந்து திருத்தியவர்.இதனால் இவருக்கு இலக்கணக் கொட்டர் என்ற சிறப்பு நாமம் உண்டு. "எழுத்தொடு சொற்பொருள் யாப்பணியென்னு மிலக்கணங்கள் பழுத்துள நாவினன்" என புன்னாலைக்கட்டுவன் வித்துவான் சி.கணேசையர் இவரது மேதாவிலாசத்தைப் பேசுவார். "தோமறு தமிழ்ச் சொன்மாரி தொலைவின்றிப் பொழியு மேகம்" எனத் தமிழ்நாடு கும்பகோணம் வைத்தியநாத தேசிகர் இவரது கவிதாசக்தியைப் போற்றுவார்.

முருகேச பண்டிதர் முதலில் சுன்னாகத்தில் ஒரு கல்விச்சாலையை நிறுவி, அங்கு தமிழிலக்கண, இலக்கியங்களைக் கற்பித்தார். அங்கு இவரிடம் கல்வி கற்ற மாணவர்களுள் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், ஊரெழு சரவணமுத்துப் புலவர், மானிப்பாய் முத்துத்தம்பிப்பிள்ளை ஆகியோர் தலையாயவர்களாவர்.இவரது புகழ் எங்கும் பரவியதால் பல இடங்களிலுமிருந்து கற்பிக்குமாறு கோரி, மாணவர்கள் கற்றனர். இவர் கற்பித்த இடங்களைக் கீழ்வரும் குமாரசுவாமிப் புலவர் பாட்டால் அறியலாம்.

சுன்னைநகர் புன்னைநகர் சொல்லியதென் கோவைநகர்
மன்னுசிறுப் பிட்டியள வெட்டியொடு மல்லாகம் துன்னியகல் வளைமுதலாம்
தொன்னகர்வாழ் மாணவர்க்கு பன்னுதமிழ் சொன்னவன்மன் முருகேச பண்டிதனே.

அவ்வகையில் சுன்னாகம், புன்னாலைக்கட்டுவன், கோப்பாய், சிறுப்பிட்டி, அளவெட்டி, மல்லாகம், கல்வளை ஆகிய இடங்களில் இவரது தமிழ் வகுப்புக்கள் இடம்பெற்றன. ஏழாலையில் சி.வை.தாமோதரம்பிள்ளையால் தொடக்கப்பட்ட தமிழ் வித்தியாசாலையில் சில காலம் தலைமையாசிரியராக விளங்கினார். பின்னர் கோப்பாயில் நீதிவான்

அம்பலவாணர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையில் 10 ஆண்டுகள் தலைமையாசிரியராகக் கடமையாற்றினார்.

தமிழிலக்கணத்தில் நேரும் வழுக்களைக் கண்டறிவதில் வல்லவரான இவர் ஆறுமுக நாவலரால் பதிப்பித்து வெளியிடப்பட்ட நூல்களில் காணப்பட்ட இலக்கணத் தவறுகளையும் எடுத்துரைத்திருந்தார்.பின்னர் ஆறுமுக நாவலருடன் இணைந்து செயற்பட்டிருந்தார்.1878ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து கிறீஸ்தவ மதப் பிரசாரத்துக்காக யாழ்ப்பாணம் வந்த அருளப்ப முதலியாரை வாதுக்கழைத்ததுடன் அவரால் இயற்றப்பட்ட அலங்கார பஞ்சகம் நூலில் காணப்பட்ட இலக்கண வழுக்களைத் திரட்டி அலங்கார பஞ்சக சண்ட மாருதம் என்ற கண்டனப் பத்திரத்தையும் ஆக்கி,இலங்கைநேசன் பத்திரிகை மூலம் வெளியிட்டார்.
1878இல் கதிர்காம யாத்திரைக்குச் சென்று வரும் வழியில் இவரது மனைவி கதிராசியம்மையார் நோய்வாய்ப்பட்டு இறந்தார்.இவர்களுக்குப் பிள்ளைகளும் இருக்கவில்லை.இதனைத் தொடர்ந்து அவ்வாண்டிலேயே இந்தியா சென்றார்.அங்கு கும்பகோணம்,சென்னை,சிதம்பரம்,காஞ்சிபுரம்,சேலம், திருப்பாற்றூர் ஆகிய இடங்களில் இருபத்திரண்டு ஆண்டுகள் கல்வி கற்பித்தும், நூல்கள் இயற்றியும் வாழ்ந்தார்.
கும்பகோணம் உயர்தரப் பாடசாலை வேலைக்கு கோரியிருந்தனர். இவரும் விண்ணப்பித்திருந்தார். இவரைப் போலப் பலரும் விண்ணப்பித்ததால் பண்டிதர் தியாகராசச் செட்டியார் மூலம் ஒரு பரீட்சை நடத்தப்பட்டது.அதில் பங்குபற்றிய முருகேச பண்டிதர் வினாக்களுக்கு விடை எழுதவில்லை.பதிலாக வினாப்பத்திரத்தில் உள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டி எழுதினார். இதனால் பரீட்சை எழுதியவர்களுள் புலவரே தெரிவு செய்யப்பட்டார். அங்கு எட்டு ஆண்டுகள் ஆசிரியராகக் கடமையாற்றினார். கலாநிதி உ.வே.சாமிநாதையர் சீவகசிந்தாமணி நூலை 1887இல் திருத்திப் பதிப்பித்த போது அதில் காணப்பட்ட வழுக்களைச் சுட்டிக்காட்டி சீவகசிந்தாமணி வழுப்பிரகரணம் என்ற கண்டனப்பத்திரத்தை வெளியிட்டதுடன், அவரை வாதுக்கழைத்தார்.எனினும் இவரது புலமையுணர்ந்த உ.வே.சாமிநாதையர் வாதுக்கு வரவில்லை.இவை இவரது புலமைக்கான சிறந்த சான்றுகளாகும்.

முருகேச பண்டிதர் சுன்னாகம் சந்திரசேகரப் பிள்ளையார்,சுன்னாகம் தெற்கு சிவபூதராயர், மயிலணி சுப்பிரமணியர், மயிலணி மகாவிஸ்ணு,வத்தாக்கை அம்மன் ஆகிய ஆலயங்கள் மீது ஊஞ்சல் பாடியுள்ளார். மயிலணி விசாலாட்சி அம்மன் பதிகம்,குடந்தை வெண்பா,மயிலணிச் சிலேடை வெண்பா, பதார்த்த தீபிகை,நீதிநூறு ஆகிய நூல்களும் இவரால் இயற்றப்பட்டன.
இந்தியாவின் திருப்பாற்றூரிலே வாழ்ந்த காலத்தில் 1900ஆம் ஆண்டு ஆவணி மாதம் 10ஆந் திகதி தமது 71ஆவது வயதில் முருகேச பண்டிதர் இறையடி சேர்ந்தார். இவரது உடலம் அங்குள்ள மக்களால் சகல சிறப்புக்களுடனும் சமாதி வைக்கப்பட்டது.
தமிழகத்திலும்,ஈழத்திலும் சுன்னாகத்தின் புகழை நிலை நிலைநிறுத்தி அமர வாழ்வு கண்ட மகத்தான அறிஞரின் புகழ் என்றும் நிலைத்திருக்கும்.அவரது நினைவைச் சுமந்து கனடா சுன்னாகம் ஒன்றியத்தார் அவரது பெயரில் அரங்கு அமைத்திருப்பது மிக மேன்மையான செயற்பாடாகும்.

**திரு.சு.ஸ்ரீகுமரன்** (B.A.,PG Dip.in.Ed.,Spl.Trd.,M.Ed)
அதிபர்,கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயம்

# துரித பணமாற்றுச் சேவையில் முன்னோடிகள்

## இரு இடங்களில் சேவை புரிந்து வரும்

# மு.காசிப்பிள்ளை சக புத்திரர்கள்

*Kasippillai & Sons*

பொன்விழா கண்ட ஸ்தாபனம்

**20** ஆண்டுகள் கனடாவில்
துரித பணமாற்றுச் சேவையிலும்


**53** வருட வணிகத் துறையிலும்
தமிழ் மக்களின் இதயங்களில் இடம்
பிடித்த வணிகத்துறை வல்லுனர்கள்



## கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா?

| | |
|---|---|
| 3228 Eglington Ave. E.<br>Suite # 3<br>Scarborough<br>ON, M1J 2H6<br>**Markham & Eglington** | 3351 Markham Road<br>Suite # 109<br>Scarborough<br>ON, M1X 0A6<br>**Markham & Steels** |
| 416 - 267 - 8221 | 416 - 321 - 8221 |

# வலி - தெற்குப் பிரதேச சபை - சுன்னாகம் கொத்தியாலடி இந்துமயான புனரமைப்பு தொடர்பான ஒரு நோக்கு



கொத்தியாலடி இந்து மயான நிர்வகசபை பலமுறை புதிதாகத் தெரிவு செய்து இயங்கிய போதும் அச்சபைகளினால் கொத்தியாலடி இந்து மயானம் தொடர்பான எதுவித முயற்சிகளும் எடுக்கப்படவில்லை. வலிதெற்குப் பிரதேச சபை தேர்தல் மூலம் புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு புதிய நிர்வாகம் அமைக்கப்பட்டது. முதலாவது நிர்வாக சபைக் கூட்டத்தில் கொத்தியாலடி இந்து மயானம் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது. அவ் வேளையில் கனடாவாழ் சுன்னாக மக்கள் ஒன்றியப் பொருளாளர் திரு. சி. உதயகுமார் சுன்னாகம் வந்திருந்தார். வலி - தெற்குப் பிரதேச சபை புதிய தலைவர் திரு. தி. பிரகாஷ் அவர்களும் நானும் திரு. சி. உதயகுமரைச் சந்தித்து கொத்தியாலடி இந்து மயானம் புனரமைப்புத் தொடர்பாக கலந்துரையாடினோம். இதன் பின்னர் கனடா வாழ் சுன்னாகம் மக்கள் ஒன்றியத் தலைவர் திரு. பொ. சுவாமிநாதர் அவர்கள் சுன்னாகம் வந்திருந்தார். அச்சமயம் அவருடன் கலந்தாலோசித்து கொத்தியாலடி இந்துமயான புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது.


ஒன்றியத் தலைவர் அறிவுறுத்தலின்படி மயான புனரமைப்புப் பொறுப்புக்களை நானும் திரு. பொ. தேவராசா அவர்களும் ஏற்றுக்கொண்டோம். எங்களது அயரா உழைப்பினாலும், விடாமுயற்சியினாலும் இந்து மயான புனரமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. கனடா வாழ் மக்கள் ஒன்றியத்தின் நிதி உதவிகள். ஆலோசனைகள் கிடைக்கப் பெற்றன. அதனால் இந்து மயானத்திற்கு சுற்று மதில் அமைக்கப்பட்டு நுழைவாயிலில் அழகான வளைவும் பெரிய வாயிற் கதவு ஒன்றும் அமைப்பதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதே போன்று பலவிதங்களிலும் எதிர்கால வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும் என்று வலி - தெற்குப் பிரதேச சபை சார்பில் வாழ்த்துக்கள் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

நன்றி

**உறுப்பினர்**
வலி தெற்குப் பிரதேச சபை,
சுன்னாகம்.

*K. KARUNAINAYAGAM*
*Treasurer*
*Kothialady Hindu Crematorium*
*Develop... ent Society*
*Chunnakam*

# கனடா வாழ் சுன்னாக மக்கள் ஒன்றியத்தின் பரிணாம வளர்ச்சி பற்றி ஒரு பார்வை



கனடா வாழ் சுன்னாக மக்கள் ஒன்றியம் தனது 12 வது வயதெல்லையை பூர்த்தி செய்து 13 வயதிற்க்கு அடி எடுத்து வைக்கிறது. என்பதை நினைக்கும் போது இதன் பரிணாம வளர்ச்சி தான் என்னே என்று வியப்படையாமல் இருக்க முடியவில்லை.

இவ் ஒன்றியத்தின் வளர்ச்சியில் அக்கறை காட்டி வளர்த்த ஒருவன் என்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்வளவு குறுகிய காலத்தில் இத்தனை சாதனைகள். அளப்பரிய சாதனைகள் மிகவும் போற்றக் கூடிய சேவைகள். யாழ்ப்பாணப்படத்தில் ஒரு திலகம் போல் அமையக்கூடிய சுன்னாகத் திலகம் இதற்கோர் அழகிய மைதீட்டல்.

பிறர் பிள்ளை தலை தடவ தன் பிள்ளை தானே வளரும் என்ற ஆன்றோர் வாக்குக்கமைய எம் வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்ற ஆசிரியர் அ.தம்பித்துரை அவர்களின் போற்றக்கூடிய அனுபவங்கள் முன்னாள் தலைவர்களாக உறுதுணையாக நின்ற ஏனைய தலைவர்கள் காரியதரிசிகள் மதிக்கத்தக்க மாண்புறு பிரதம அதிதிகள் சிறப்பு வாய்ந்த நிர்வாக உறுப்பினர்களின் ஆக்கமும் ஊக்கமும் ஒன்றியத்தின் வளர்ச்சிக்கு மிகவும் பெரும் துணையாக நின்றன என்றால் மிகையாகாது.

தமது தலைவர்களை ஆண்டு தோறும் தெரிவு செய்த சுன்னாகம் பெருங்குடிமக்கள் இவ் ஒன்றியத்திதை கண்ணும் கருத்துமாக காப்பாற்றுவதற்கு ஏற்புடைய காப்பாளர்களையும் ஆலோசகர்களையும் தெரிவு செய்யாமல் விடவில்லை.

என்னை காப்பாளர் ஆகவும் மன்றத்தின் ஆலோசகர் ஆகவும் தெரிவு செய்து அனுபவங்களை இவ் ஒன்றியத்திற்கு முழுக்க முழுக்க அற்பணிக்குமாறு வேண்டிய போது யான் துணிச்சலுடன் ஏற்றுக் கொண்ட காரணம் என் முன் அனுபவங்களேயாகும்.

1956 ஆம் ஆண்டு நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரியில் உதவியாசிரியப்பணியை ஏற்றுக்கொண்ட யான் சமுக ஸ்தாபனங்களான (YMHA) இந்து வாலிப சங்கத்தின் காரியதரிசி பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு செயலாற்றிய அனுபவம் எனக்கு இவ் ஒன்றியத்திற்கு சேவை செய்ய உதவியாக இருந்தது.

Y.M.H.A நாவலப்பிட்டி புகையிரத ஊழியர்கள் அரசாங்க ஆஸ்பத்திரி ஊழியர்கள் தாபால்நிலைய ஊழியர்கள் காவல் நிலைய ஊழியர்கள் Brown&co ஸ்தாபகர்கள் ஆத்ம சோதி நிலைய ஸ்தாபகர்கள் போன்றோர் அங்கத்தவர்களாக விளங்கினர். இங்கு தான் ஆத்ம சோதி நிலைய நிறுவகர் இராமச்சந்திரன் புகையிரத நிலைய அதிபர் ஆத்மசோதி இதழாசிரியர் நா. முத்தையா சுவாமி அவர்கள் கேணல் சபாநாயகம் இறங்கநாதன் திரு. ஆ.தொண்டமான் ஆறுமுகம் தோட்டஉரிமைளார் கனகசபை, சுப்பிரமணியம் போன்ற பெரியோர்கள் கனவான்களுடன் பழகும் வாய்ப்பும் பெற்று அவர்களின் அன்பையும் பெற்று இருந்தபடியால் எமது சுன்னாகம் ஒன்றியத்திற்கு தேவையான காலங்களில் எனது ஆலோசனைகளை வழங்கி இவ்வொன்றியத்தை வளர்க்க கூடிய வாய்ப்பைப் பெற்று இருந்திருந்தேன். அத்துடன் எம் மண்ணின் மைந்தர்களின் உறவுகளின் உடன் பிறப்புகளின் அன்பும் நம்பிக்கையும் விசுவாசமும் எனது இளைப்பாறிய காலத்தில் சேவையை மெச்சுற வைத்ததென்றால் பொருத்தமல்லவா?

2000 ஆம் ஆண்டு இறுதி மாதமான டிசம்பரில் வந்த முதல் சனிக்கிழமை 2ம் திகதி எமது ஒன்றியத்தின் பிறந்த நாளாகும்.

இவ் ஆரம்ப விழாவிற்கு முதல் முதல் பிரதம அதிதியாக எனது பழைய மாணவனும் பிரசித்தி பெற்ற U.S.A South Carolina ஆஸ்பத்திரியில் Prof. ஆக கடமையாற்றிய Dr.Ranjit. Rajah அவர்களே சமூகம் கொடுத்து சிறப்பித்தார்கள்.

இவ் ஒன்றியத்தை இயக்குவதற்கு ஒரு யாப்பு திருவாளர்.கந்தையா.மகேந்திரலிங்கத்தின் Apt.ல் எம்மால் வரையப்பட்டது. இதில் திருவாளர்கள். (தம்பித்துரை அருண் செல்லப்பா

சிறிஸ்கந்தராசா தவபாலன் சரவணமுத்து தவநேசன் தயாளன்) போன்றோர் காட்டிய அன்பும் ஆதரவு பண்பாடு இன்றும் அழியாமல் எம்மனதில் பசுமரத்தாணி போல் நிலவுகிறது. இதில் பங்கு பற்றிய எல்லோருமே அதி உயர்வு பெற்றுவிட்டார்கள். ஒன்றியமும் உயர்வு பெற்றுவிட்டது. சுயநலம் அற்ற சேவை எப்பவும் உயரும் வளரும். தன் சேவையை ஆலமரம் போல் ஆழமாய் ஆற்றும்.

எமது யாப்பில் வரையப்பட்டது போல் எமது மண்ணின் விருத்தியே எமது முக்கிய சேவை. கல்வி கலை கலாச்சாரம் போன்றவற்றில் எம்ண்ணின் உடன்பிறப்புகளை பங்குபற்ற வைத்தல் என்ற உடன்பாடு உண்டு. அதிதிகள் எல்லாம் மண்ணின் பிரசித்தி பெற்றவர்களாக இருக்கவேண்டும்.

ஒன்றியத்தின் வளர்ச்சிக்குக் காரணம் யாப்பை ஒழுங்காக கடைப்பிடித்தலேயாகும். எமது நிர்வாக சபை ஒரே நோக்குடன் வேற்றுமையில் ஒற்றுமை கண்டு உழைக்கின்றது. மண்ணின் மைந்தர்கள் மத்தியில் கருத்து வேற்றுமை இருக்கும். ஆனால் கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். என்னைக்காட்டிலும் வயதளவில் குறைந்தவர்களாய் இருப்பினும் எமது ஆலோசனைகளை வரவேற்கும் பண்புள்ளவர்களாவர்.

ஒன்றியம் ஆரம்பித்த காலத்தில் எமது மன்ற உறுப்பினர்கள் மிகவும் அக்கறை காட்டி தத்தம் பிள்ளைகளையும் ஏனைய உறுப்பினர்களின் பிள்ளைகளையும் சிரமம் பாராது விளையாட்டுப் போட்டி கலை கலாச்சாரநிகழ்வுகள் நாட்டியம் நடனம் நாடகம் போன்ற இன்னோரன்ன நிகழ்வுகளில் கண்டிப்பாக பங்குபற்ற வைத்தனர். பிள்ளைகளை ஒய்வு நேரங்களில் ஒரு பொது இடத்தில் கூட்டி நிகழ்வுகளில் பயிற்சி பெறச் செய்தனர் பங்கு பற்றும் பிள்ளைகள் வீட்டிற்குச் சென்றும் பயிற்சி அளித்தோம். பயிற்சி எடுத்து பதிவு செய்த பிள்ளைகளைமட்டுமே போட்டிகளில் பங்கு பற்றச் செய்துள்ளோம். போட்டிகள் யாவும் ஒருதனிப்பட்ட நிலையில் (standard) காணப்பட்டன. இப்படியான பேச்சுப் போட்டிகள் கட்டுரைப் போட்டிகள் (Scarborugh Civic Centre)ல் மத்தியஸ்தர்கள் மத்தியில் நடைபெற்றன.பங்கு பற்றியவர்கள் அனேகருக்கு பரிசுகள் வருடாந்தக் கலைவிழாவில் விருந்தினர்களால் வழங்கப்பட்டன.

சில மாணவர்கள் தங்கப்பதக்கங்கள் பெற்று இருந்தனர். இப்பதக்கங்கள் யாவும் பொதுமன்ற உறுப்பினர்களாலேயே அன்பளிக்கப்பட்டவை. எம்மன்ற வைபவங்களில் பங்குபற்றிய மாணவர்கள் பலரும் இன்று நல்ல உத்தியோகங்களில் நல்ல பதவி வகிக்கின்றனர். சிலர் உயர் கல்வியைத் தொடர்கின்றனர்.இவர்களில் சிலரின் பெயர்களை குறிப்பிடுவது நன்று என நினைக்கிறேன்.

செல்வி.வடிவேலு செல்வி.ஜெயநாதன் செல்வி. தவபாலன், செல்வி.நாகரத்தினம் செல்வி.செல்வராசா, செல்வி.பகிரதன், செல்வன். கனகநாயகம், செல்வன். தயாளன் முத்துலிங்கம்

மேலே குறிப்பிட்ட பிள்ளைகளின் நிகழ்வுடன் தான் எமது வருடாந்த நிகழ்வுகள் ஆரம்பமாவது வழக்கம். எல்லா நிகழ்வுகளிலும் எமது சுன்னாக மக்களே தெரிந்து கொடுக்கப்படுவர்.இவர்களின் பிள்ளைகளே பங்காளர்களாகவும் இருப்பர். இவர்களின் நடனம் பாட்டு போன்ற நிகழ்வுகளுடன் ஒரு சில கோஷ்டிகளும் பணம் கொடுத்து நடைபெறுவது வழக்கம். நாடகங்கள் எமது உறுப்பினர்களாலேயே பழக்கப்பட்டு பங்கு கொள்ளப்பட்டு சபையின் கரகோசங்களை பெற்றன. மேலும் நிகழ்வுகளான வில்லுப்பாட்டு நடனம் திரை இசை நடனம் கவிதை கவியரங்கு பட்டிமன்றம் போன்றவை எமது உறுப்பினரின் பங்கு பற்றுதலிலேயே நடைபெற்றன. இந்நிகழ்வுகளுக்கு பிறரிடம் சென்று பணம்கொடுத்து நடத்தியிருந்தால் யாம் ஒன்றியத்தின் வங்கிக்கணக்கில் இப்படியான பெரும் தொகைப் பணத்தை சேமித்து வைத்திருக்கவும் முடியாது. இன்றைய எமது வேலைத்திட்டத்திற்கு செலவு செய்யவும் முடியாது. இப்படியான சிக்கனமாக இருந்தபடியால் நாங்கள் எமது பிறந்த ஊருக்கு தபால்நிலையத்திற்குக் காணியையும் மயானத்திற்கு புனரமைப்பையும் செய்ய முடிந்தது. தற்போதைய நிர்வாக சபையும் சிக்கனத்தைக் கடைப்பிடித்து எமது மண்ணிற்கும் எம் உடன் பிறப்புகளிற்கும் சேவை செய்ய முன்வர வேண்டும்.

ஈற்றில் எமது மன்றம் ஆற்றிய அரும் பெரும் சேவைகளில் ஒன்று அல்லது இரண்டைக்குறிப்பிடுவது சாலப் பொருத்தம் என நம்புகிறேன்.

அடுத்து எமது சுன்னாக மக்கள் மன்றம் சுன்னாக பட்டண சபை எல்லைக்குள் அடங்குகிறது. எமது பட்டண சபை எல்லைக்குள் இயங்கிவரும் தபால் நிலையம் (சுன்னாக) 88 ஆண்டுகளாக வாடகை நிலத்திலேயே இடம் பெற்று வந்தது. இதற்கு சொந்தமாக ஒரு கட்டிடமும் நிலமும் தேவை என்பதை இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த எத்தனையோ தபால் அதிபர் கடமை புரிந்தும்

இத்தேவையை உணரவில்லை. இப்பிரதேசத்தைச சேராத ஒரு தபால் அதிபர் இங்கு மாற்றலாகிவந்து இத்தேவையை உணர்ந்து இங்குள்ள மக்களையும் எம்மன்றத்தையும் தொடர்பு கொண்டபடியால் எங்களுக்கென ஒரு சொந்த தபால் கட்டிடம் கட்டக்கூடிய நிலம் பெறும் வாய்ப்புப் பெற்றோம்.

தற்சமயம் தபால் நிலையம் இருக்கும் நிலமே பணம் கொடுத்து கொள்வனவு செய்யப்பட்டு கட்டிடம் கட்டுவதற்கு விலைக்கு வேண்டப்பட்டு உறுதியும் பெற்றுள்ள நிலமாகும். இதற்கு ஒன்றியம் 612750.06 ரூபாயும் திரு.சேதுகாவலர்.விபுலானந்தன் (குட்டி மாஸ்டர்) 50000.00 ரூபாயும் கொடுத்துதவினார். சுன்னாகம் தபால் நிலையம் 7 Million செலவில் கட்டிடம் கட்டப்படும். என்று (Govt.Gazzettee) அரசாங்க விளம்பரப் பத்திரிகையில் விளம்பரமும் செய்யப்பட்டுள்ளது.

அடுத்து 2006 ஆம் ஆண்டில் ஒரு சமுதாயப்புரட்சி மூலம் எமது ஊரில் உள்ள கொத்தியாலடி இந்து மயானத்தை புனரமைப்புச் செய்ய வேண்டுமென்று பணம் திரட்ட முயன்றோம். இத் திட்டத்திற்கு எமது மன்றத்தலைவர் திரு. முத்துலிங்கம், தயாளன் தனது முழு உதவியையும் நல்கினார். தனது ஸ்தாபனத்தின் வாகனம் ஒன்றையும் ஓட்டுனர் ஒருவரையும் தந்து ஆக்கமும் ஊக்கமும் அளித்தபடியால் எமது மன்ற உறுப்பினர்ரின் உதவியினாலும் $ 15,185. 00 சேர்க்க முடிந்தது. அந்த ஆண்டின் வருடாந்த இராப்போசன கலைவிழா செலவுகள் போக $7,150.00 வங்கியில் வைப்புப் பணமாக வைக்கப்பட்டு சிறுதுளி பெருவெள்ளமாக $15,185.00 ஆகப் பெருகியது. நாட்டு நிலைமை சீரடைந்ததும் இவ்வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க பட்டணசபை ஒரு அபிவிருத்திச்சபையை ஏற்படுத்தியது. இதற்கு முன்னர் 2005 இன் பிற்பகுதியில் யானும் உபதலைவர் நாகமுத்து. தயாளனும் சுன்னாகம் சென்று பட்டணசபை காரியதரிசி பொறியியலாளர்கள் கொண்ட குழுவை அழைத்துச் சென்று மயான நிலத்து வேலைத் திட்டத்தையும் வகுத்ததோடு நாட்டின் நிலைமை சரிவராதபடியால் வேலைகள் ஆரம்பிக்கப் படவில்லை.

புதிதாக நியமிக்கப் பட்ட அபிவிருத்திச்சபையில் கிராமத்தில் அக்கறையுள்ளவர்கள் நியமிக்கப்பட்டு இருந்தபடியால் யாமும் அதை ஒப்புக் கொணடுள்ளோம். இவ்வேலைத்திட்டத்திற்கு யானே பொறுப்பாக இருக்கவேண்டும் என்று பொது நிர்வாக சபை அனுமதித்தபடியால் தவணை முறையில் பணம் அனுப்பலாம் என தெரிவித்து வேலை 08.08.2012 இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ரூ 20 லட்சம் தான் கொடுக்க முடியும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அபிவிருத்திச்சபை செயலாளர் திரு. தேவராசா திரு.கனகநாயகம் போன்றோருடன் அடிக்கடி தொடர்பு கொண்ட பிரகாரமும் Video C.D மூலமும் மதில் வேலை (650 feet உயரம் 8 அடி) கொண்ட வேலை நிறை வேறியது என்றறியத் தருகிறேம். இவர்களுக்கு ரூபா 18,02909 இதுவரை அனுப்பியுள்ளோம். கணக்குகள் சரி பார்த்து பொதுச்சபைக்கு சமர்ப்பிக்கப் படுமென்பதையும் தெரியத் தருகிறேன்.

திரு. தேவராசா திரு.கனகநாயகம் போன்றோர் உண்மையில் சேவை மனப்பான்மை உடையவர்கள் என்பதை எமக்கு செய்த சேவையில் இருந்து யாம் அறியக்கூடியதாய் உள்ளது. இவர்கள் போன்ற உள்ளம் கொண்டோர் ஒருகிராமத்தில் இருப்பின் அக்கிராமம் எல்லாவகையிலும் முன்னேறும் என்று நம்பலாம்.

இத்துடன் சுன்னாகப் பட்டண சபைத்தலைவர் T.Piragash, செயலாளர் போன்றோர்க்கும் எமது நன்றியைக் கூறி நன்றியுடன் இக்கட்டுரையைப் பூர்த்தி செய்வதுடன்

“ஒன்று பட்டால் உண்டு வாழ்வு“

United We Stand ,Divided, fall என்றும் “Arise, Awake and Stop not till the Goal is Reached” என்ற Swami Vivekanandaரின் பொய்யா மொழியுடன் விடை பெறுவோமாக.

**Dr.Thiru.Kanthiah.**
Patron advisor To People's
Association &Rtd Coolege Principal


OPTIMART
25 வருடத்திற்கும் மேலான சேவை
முழுக் கண்ணாடி
விழி வில்லைகள்
உங்கள் கண்ணின் நிறங்களை மாற்றக்கூடிய விழி வில்லைகளை நியாயமான விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
Eye Glasses
Contact Lenses
We have EXCELLENT PRICES on colour contact lenses to change the colour of your eyes
Served By Licensed Opticians
Office Hours:
Mon-Fri: 10a.m. - 8p.m.
Sat: 10a.m. - 5p.m.
Sun: 12 noon - 4 P.M
416-266-3389
3150 Eglinton Ave.
(Markham & Eglinton)
Scarborough, ON
M1J 2H2
416-690-4649
294 Main St. (At Danforth)
Professional Building
Toronto, ON
M4C 4X5
416-297-9903
3351 Markham Rd.
Unit A115
(Markham & Steeles)
Toronto, ON
M1X 0A6

# கனடா வாழ் சுன்னாகம் மக்கள் ஒன்றியம் நிர்வாகக் குழுவினர்



காப்பாளர்கள்: டாக்டர்.S.மணிவண்ணன் M.D.CCFP
திரு.க.திருநாவுக்கரசு M.A
திரு.அருண்.செல்லப்பா Realtor

தலைவர் : திரு.பொ.சுவாமிநாதர்
உபதலைவர்: திரு.நா.தயாளன்

செயலாளர்: திரு.ந.தர்மலிங்கம்
உபசெயலாளர்: திரு.க.தவனேஸ்வரன்

பொருளாளர்: திரு.சி.உதயகுமாரன்
உபபொருளாளர்: திரு.சி.ரமணன்

## நிர்வாக அங்கத்தவர்கள்:

திருமதி.ச.ராதிகா
திருமதி.த.சாந்தினி
திரு.S .தவபாலன்
திரு.K.மகேந்திரலிங்கம்
திருமதி.யூடிற்றா சக்திகுமார்
திரு.R.சிறிகதிர்காமநாதா
திரு.S.சூரியகுமார்
திரு.K.அருள்நடராசா
திரு. T.சின்னராசா

திரு.S.தம்பு
திரு.S.நந்தகுமார்
திரு.A.தயாபரன்
திருமதி. சு.லட்சுமி
திரு.S.பொன்னம்பலம்
திரு.K.ஸ்ரீஸ்கந்ததராசா
திருமதி.T.சுசிந்தா
திரு.T.தயாளன்
திரு.S.பரமசிவம்
திரு.T.பகீரதன்

திரு.A.வடிவேலு
திரு.T.ஈஸ்வரன்
திரு.S.சக்திகுமார்
திரு.V.கனகநாயகம்
திரு.P. பரமநாதன்
திரு.M.சகாதேவன்
திருமதி.T.ஷர்மிலா
திரு.N.ஜெகநாதன்
திரு.M.தயாபரன்


Discover Peace Of Mind In Life
MEGA Financial Group
"Foundation of Your Financial Freedom"
Life Insurance
Term Insurance
Critical Insurance
Mortgage Insurance
Non -Medical Insurance
Group Insurance
RESP
Super Visa Medical Coverage Also Available
INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
RBC Insurance
Unity Life
Canada Life
UL Mutual
Sun Life Financial
Vany Jeganmohan
416-670-7436
WWW.VANYFINANCIAL.CA
VANY@MEGAFINANCIAL.CA
PH 28-4168 FINCH AVE.E, SCARBOROUGH,ON M1S 5H6

PUBLIC, LIBRARY
JAFFNA





RBC Royal Bank

MORTGAGES

Trusted Advice from Canada's
#1 Mortgage Provider

RBC
Royal Bank


Mike Ahilan
Senior Account Manager
416.220.1184



Thinking of

# Buying or Selling?

905areahomes.ca
416homes.com






# Ken Kirupa

Sales Representative

MLS MULTIPLE LISTING SERVICE | REALTOR | Award 2006 | Award 2004, 2007, 2008, 2009, 2010, 2011, 2012 | RE/MAX Curbside Marketing | RE/MAX Sold for the Cure | Find me on Social Media.

Re/Max Crossroads Realty Inc, Brokerage | 1055 McNicoll Ave, Toronto, ON. M1W 3W6
416.491.1002 | 416.830.8191 | kenkirupa@remax.net

## சுன்னாகம் மக்கள் ஒன்றியம் கலைவிழா 2012

# முருகேச பண்டிதர் அரங்கம்

## நிகழ்ச்சி நிரல்

மங்கள விளக்கேற்றல்

| | |
|---|---|
| பிரதம விருந்தினர் | திரு.மகாலிங்கம்.மதிவண்ணன்<br>திருமதி.மதிவண்ணன்.புனிதவதி |
| சிறப்பு விருந்தினர் | திரு..தனேந்திரன் ஆறுமுகம்<br>திருமதி.ஞானகலாவதி.தனேந்திரன் |

இதய அஞ்சலி

கனடா கீதம்

தமிழ்த்தாய் வாழ்த்து

சுன்னாக மக்கள் ஒன்றியக் கொடிக்கீதம்

| | |
|---|---|
| வரவேற்புரை | Dr.மணிவண்ணன் |
| ஆசி உரை | சிவாகம வித்வான் Dr.சிவஸ்ரீ சோமஸ்கந்தக்குருக்கள் |
| தலைவர் உரை | திரு. பொ.சுவாமிநாதர் |
| சிறப்பு விருந்தினர் உரை | திரு. தனேந்திரன் ஆறுமுகம் |
| பிரதம விருந்தினர் உரை | திரு. மகாலிங்கம்.மதிவண்ணன் |
| முதியோரை கௌரவித்தல் | திருமதி.அன்னமணி.இளையதம்பி<br>திருமதி.சாவித்திரி. கதிரவேலு<br>திருமதி. பரமேஸ்வரி.மகாலிங்கம்<br>திருமதி.தவமலர்.துரைராஜா<br>திருமதி.சொர்ணம்மா.ரத்தினம்<br>திருமதி.சறோஜினிஆனந்ததியாகராஜா |

# சுன்னாகம் மக்கள் ஒன்றியம் கலைவிழா 2012

| | |
|---|---|
| வரவேற்பு நடனம் | மிலானி சின்னத்துரை<br>அனுசியா மகேந்திரன் |
| Guitar Piece song | லக்சிக்கா பரமசிவம் |
| வள்ளி கணவன் நடனம் | மிலானி சின்னத்துரை<br>அனுசியா மகேந்திரன் |
| அரசநாடகம் | ஆறுமுகம் தயாபரன்அளிக்கும்<br>கல்பனாகலா மன்றத்தின் தமிழ்அரசு நாடகம்.<br>**நடிகர்கள்** ஆறுமுகம் தயாபரன் மற்றும்<br>தொலைக்காட்சி மேடைக்கலைஞர் நர்த்தனன் |
| திரை இசை நடனம் | விதேக்கா சற்புத்திரன்<br>விதுஷா ஈஸ்வரன்<br>நதூஷன் சுரேஸ்குமார் |
| விண்ணைத் தொடும் நகைச்சுவை | விடுப்புக்குழுவினர் |

## இடைவேளை

| | |
|---|---|
| நன்றி உரை | திரு.க.தவனேஸ்வரன் |
| இன்னிசை நிகழ்ச்சி | **Basement Sound Crew** தயாரித்து வழங்கும் ரிதலயம்<br>**Super singer** பாடகர்களும் கலந்து கொள்வார்கள் |
| அதிடம்பார்த்தல் | அதிஷ்டலாபச்சீட்டு |

நிகழ்ச்சித் தொகுப்பாளர்
திரு அருண் செல்லப்பா

## Are you getting Million Dollar advice?

# Life 100

INSURANCE & INVESTMENTS INC.

- Life Insurance
- Critical Illness Insurance
- Non-Medical Insurance
- Disability Insurance
- Travel Insurance
  - Super Visa
- Mortgage Insurance
- Long Term Care
- RRSP, Investments
- RESP
- Group Insurance
  - Medical & Dental Plans

**Wants to be an Insurance advisor?**
**Free LLQP Seminars and Workshops**

**Sritharan Thurairajah** CLU, CHS

Direct: **416.918.9771**

10 Millner Business Court, Suite 208,
Scarborough, ON M1B 3C6
Bus: 416-321-2500
www.life100.ca, info@life100.ca

MDRT Member of Million Dollar Round Table



SIMPLE SOLUTION IN A CRITICAL SITUATION

# Season's Greetings

*The good will of those we serve is the foundation of our success, It's a real pleasure at this Holiday time to say "Thank You". We want to take this opportunity to let you know how much you are appreciated. Best Wishes for a wonderful holiday and a happy New Year. we wish you a full year of Happiness and Success.*

Your family Realtors from
**Suresh And Team**





**Bunny** Illeperuma* | **Nera** Emmanuel* | **Suresh** Sellathurai* | **Thushi** Thurairajah* | **Shan** Rabindranathan*

**Remax Vision Realty Inc. Brokerage.** Independently Owned and Operated

**416-321-2228 | 416-844-5626**


* Sale representative


FOR
ALL
YOUR
OCCASIONS
உங்கள்
அனைத்து
வகையான
வைபவங்களுக்கும்
SCARBOROUGH
CONVENTION CENTRE
20 Torham Place
(Neilson/ Finch)
Scarborough ON
M1X 0B3
Email
info@scarboroughcc.com
Phone
416-335-6060

PUBLIC LIBRARY
JAFFNA



# AVM Max 2000 Charter Services Inc.




*Welcome Aboard!*

AVM Max 2000 Charter Service has been in business for two decades now!
Our goal is to get you to your destination comfortably, safely and affordably.

- 49 & 56* Passenger Coach Buses
- 48 Passenger School Buses

## Coach Bus Charters:

- Multi or Single Day Trips (Canada/U.S.A.)
- Atlantic City/Washington Tours
- Casinos
- Niagara Falls & Winery Tours
- Churches/Temples
- East Coast Tours
- Golf & Ski Trips
- Florida Tours
- Airport Transfers
- New York Trips/Shopping

## School Bus Charters:

You can depend on AVM Max 2000 for your chartered transportation needs

- Rent Our Buses for Your School.
- Field Trips/Sporting Events
- Church/Temple Trips
- Family Reunions
- Senior Trips
- Summer Camps
- Bar Trips
- Event Shuttles and More

*Washroom Equipped
*Airconditioned
*DVD & CD Player
*PA System

**T: 416-609-2542**


**Fax: 416-609-2551 Cell: 647-201-2542**



*"Max Will Maximize Your Maximum Comfort and Service"*


**5215 Finch Ave. E., Unit 250, Toronto, ON M1S 0C2**
**E: Info@avmmax2000.ca www.avmmax2000.ca**










TION OF CHUNNAKAM PEOPLE IN CANA






















மக்கள் ஒன்றியம்
PEOPLE IN CANADA


















HEAD OFFICE
VALI SOUTH PERADESHEYA SABHA
CHUNNAKAM.















PROPOSED BUILDING FOR
BUS STAND-CHUNNAKAM.



# 85 வயது வரை மருத்துவப் பரிசோதனை இல்லாமல் காப்புறுதி

தொழில் இழக்கும் போது (பிரசவ காலம் உட்பட) மாதாந்தக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை

சுப்பர் விசா மருத்துவக் காப்புறுதி - FULL REFUND IF SUPER VISA REJECTED

மருந்து / பல் காப்புறுதி

**DRUG / DENTAL PLAN**

(HEALTH INSURANCE)
FOR SELF - EMPLOYED
PEOPLE OR ANY ONE

**MORTGAGE INSURANCE**

**TRAVEL INSURANCE**

வீட்டு அடமானக் காப்புறுதி
கட்டிய பணத்தை மீளப்பெறலாம்

10 years term - Renewable up to age 85 & Convertible until age 71

| தொகை | $250,000 | | $350,000 | | $500,000 | |
|---|---|---|---|---|---|---|
| | F | M | F | M | F | M |
| 30 வயது | $10.58 | $12.83 | $13.01 | $16.16 | $16.20 | $19.80 |
| 35 வயது | $10.58 | $12.83 | $13.01 | $16.16 | $16.20 | $19.80 |
| 40 வயது | $13.50 | $16.43 | $17.10 | $21.20 | $19.80 | $25.20 |
| 50 வயது | $24.08 | $33.75 | $31.91 | $45.45 | $38.70 | $56.70 |

உங்களுக்குத் தேவையான
- Life Insurance
- Non-Medical Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- RRSP / RESP



பிள்ளைகளுக்கான காப்புறுதிகள்

Foresters · Canada Protection Plan · RBC Insurance · BMO Insurance · Industrial Alliance Insurance and Financial Services Inc. · Canada Life · Assumption Life · UL Mutual · Transamerica Life Insurance Company · Blue Cross Blue Shield · Equitable Life of Canada



காப்புறுதி நிராகரிக்கப்பட்டவர்களும் சேரலாம்

85 வயது வரை ஆண், பெண்

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்

## தயாபரன் ஆறுமுகம்

**Insurance broker**

416-889-3088, 905-426-6624, 905-426-7713

நான் உங்கள் வீட்டுப் பிள்ளை! இது ஊரறிந்த உண்மை!!

வீடு வாங்க, விற்க அழையுங்கள்

## தயாபரன் ஆறுமுகம்

*Sales Representative*

*Cell: 416-889-3088* email:tarumugam@trebnet.com

*Direct: 905-426-7713*

Century 21

Century 21 Affiliate Realty Inc., Brokerage

உங்கள் வீட்டை விற்கும்போது
COMMISSION இல் விசேட கழிவு
நீங்கள் வீட்டை வாங்கும்போது
விசேட சலுகை



PUBLIC LIBRARY
JAFFNA





*with compliments from*

## Millennium Leisure Travels Inc.

Since 1999

2035 Kennedy Road, Scarborough, ON M1T 3G2
Tel: 416.431.9100 • Toll Free: 1.866.FLY.4MLT
Fax: 416.431.5722 • www.flymlt.com


ACUPUNCTURE
PHYSIO THERAPHY
MASSAGE THERAPHY
FOOT ORTHOTICS
ADAPTIVE
REHABILITATION SERVICES INC.
2100 Ellesmere Road, Suite #109
Scarborough, ON M1H 3B7
Email:ramsrehab@yahoo.ca
Tel: 416 208 7232
Fax: 416 208 7141

A1 ROTI EXPERT

# வினுஷன்
# VINUSHAN

## TAKEOUT AND CATERING

- தரமும் சுவையும் குன்றாமல் அனுபவம் வாய்ந்தவர்களால் தயாரிக்கப்பட்ட சிறந்த இலங்கை, இந்திய உணவு வகைகள்
